**தி/தி/சென் மேரிஸ் கல்லூரி**
**(தேசிய பாடசாலை)**
**முதலாம் தவணைப் பரீட்சை**

**வணிகக்கல்வி**

**தரம் - 12 வர்த்தகம் (2023)** **03 மணித்தியாலம்**

## பகுதி – I

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

1) மனித தேவைகள் மற்றும் விருப்பங்கள் தொடர்பிலான சரியான கூற்று
(1) தேவைகள் பொதுவானவை விருப்பங்கள் நபருக்குநபர் வேறுபட்டவை
(2) விருப்பங்களைப் பூர்த்தி செய்வதற்கு பொருட்களை தெரிவு செய்தல் தேவை ஆகும்.
(3) வணிகரால் தேவைகளை மட்டுமே உருவாக்க முடியும்
(4) உணவு, உறையுள்,நவநாகரீக ஆடைகள் என்பன தேவைகளுக்கான உதாரணங்களாகும்
(5) தேவைகள் சமூகத் தாக்கங்களால் மாற்றம் செய்யக் கூடியவையாகும்

2) பின்வருவனவற்றுள் உற்பத்தி தன்மை அடிப்படையில் முதலாம் நிலையில் உள்ளடங்கும் தொகுதி
(1) வனவளம், மின்சாரம், நீர் சுத்திகரிப்பு
(2) அரச நிர்வாகம், கனிய அகழ்வு, மரக்கறிப் பயிர்ச்செய்கை
(3) மீன்பிடிக் கைத்தொழில், மரமறுத்தல், மூலிகைத் தாவரப் பயிர்ச் செய்கை
(4) மரம் அறுத்தல், விதைகளை நடுதல், கனிய அகழ்வு
(5) தேயிலைச் செய்கை, குளிரூட்டல், வழங்கல் காப்புறுதி

3)

| | **சூழற்காரணிகள்** | | **பலவீனங்கள்** |
|---|---|---|---|
| 1 | உரிமையாளர் | A | வகிபாகங்களுக்கிடையே மோதல் உருவாதல் |
| 2 | நிறுவன கலாசாரம் | B | நிதிப்பலம் குறைவாக இருத்தல் |
| 3 | வளங்கள் | C | உயர் மேற்பார்வை காணப்படாமை |
| 4 | நிறுவன கட்டமைப்பு | D | பற்றாக்குறையான தன்மை |

மேலே தரப்பட்ட சூழற்காரணிகளுக்கான பலவீனங்களாக அமைபவை,

(1) 1 – B, 2 – D, 3 – A, 4 – C (2) 1 – A, 2 – D, 3 – B, 4 - C
(3) 1 – C, 2 – D, 3 – A, 4 – B (4 ) 1 – C, 2 – B, 3 – D, 4 - A
(5 ) 1 – B, 2 – C, 3 – D, 4 - A

4) பின்வருவனவற்றுள் வாடிக்கையாளர்களின் சமூகப்பொறுப்புக்களை மட்டும் கொண்ட தொகுதி
A – பொருளாதார நலன்களைப் பெறல்
B – உரிமைகளைப் பாதுகாத்தல்
C - தொழில் பாதுகாப்பு
D - சேதத்தை இழிவுபடுத்தல்
E – நியாயமாக நடந்து கொள்ளல்

(1) ACD (2) ACE (3) BDE (4) CDE (5) BDE

5) பின்வருவனவற்றுள் அகச்சூழல் காரணிகளின் போக்குகளை மட்டும் கொண்ட தொகுதி

a – பொருளாதார விலைமட்ட அதிகரிப்பு

b – தொழில் பெறுநர் திரும்பலில் குறைவு

c – நிறுத்தி வைத்த உழைப்புக்களில் குறைவு

d - சனத்தொகையில் அதிகரிப்பு

e – போட்டியில் அதிகரிப்பு

f - தொழில் பெறுநர் - தொழில் தருநர் முரண்பாடுகள்

(1) b,c,d (2) a,c,d (3) a,d,e (4)b,c,f (5) c,d,f

6) பின்வருவனவற்றுள் வரியல்லா வருமானங்களில் உள்ளடங்காத தொகுதி

(1) வருமானவரி, கட்டண அறவீடு, கம்பனிவரி

(2) மூலதன இலாபத்தின் மீதான வரி, கம்பனிவரி, பங்குலாபம்

(3) பெறுமதி சேர்க்கப்பட்ட வரி, உற்பத்தி வரி, கலால் வரி

(4) நிறுத்தி வைத்தல் வரி, சுங்க வரி, லொத்தர் சீட்டு விற்பனை வருமானம்

(5) வருமானவரி, கலால் வரி, கட்டண அறவீடு

7) அரசினால் வணிகங்களுக்கு கிடைக்கும் உதவிகள், வழிகாட்டல்கள் என்பன முக்கியத்துவம் பெறும் முறைகளாவன

(1) வணிகங்களைப் பதிவு செய்வதில் ஈடுபடல்.

(2) நன்மதிப்பு உயர்வடைதல்.

(3) நாட்டின் அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்தல்.

(4) அரசினதும் மக்களினதும் அங்கீகாரம் கிடைத்தல்.

(5) மேற்கூறிய யாவும்

8) அரசின் பொருளாதார நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு வணிகங்கள் பங்களிப்புச் செய்யும் முறைகள் அல்லாதவை

(a) வரிக் கொடுப்பனவு

(b) சாதகமான சர்வதேச வியாபாரம்

(c) சூழல் மாசடைவதை இழிவுபடுத்தல்

(d) பூரண வேலைவாய்ப்பு மட்டம்

(e) சட்டதிட்டங்களைப் பின்பற்றுதல்

(f) பொருளாதார வளர்ச்சியும் அபிவிருத்தியும்

(1) a,c,d (2) c,e,f (3) b,d,f (4) a,d,f (5) d,e,f

9) பின்வருவனவற்றுள் நுகர்வோர் அலுவல்கள் தொடர்பிலான அதிகாரசபையின் கருமங்களாக அமையாதது

(1) முயற்சியாளர்களிடையே மட்டுப்படுத்தப்பட்ட ஒப்பந்தங்களைக் கட்டுப்படுத்தல் அல்லது அகற்றல்.

(2) தர நியமங்கள், தரக்கட்டுப்பாடு என்பனவற்றை மேம்படுத்தும் செயற்பாடுகள்

(3) உள்நாட்டு அல்லது சர்வதேச வியாபாரத்தில் அல்லது பொருளாதார அபிவிருத்தியில் பாதகமான முறையில் தாக்கம் செலுத்துகின்ற போட்டித்தன்மை தொடர்பான இடையூறுகளை இல்லாமலாக்குதல்.

(4) போட்டிக்கெதிரான நடத்தைகள், தன்னாதிக்க நிலைமை என்பவற்றைப் பொருத்தமற்ற வகையில் பயன்படுத்துவது தொடர்பாக விசாரணை செய்தல்

(5) பொருட்கள் சேவைகளின் விலை, அவற்றை பெற்றுக் கொள்ளக் கூடியதாயிருத்தல், அவற்றைப் பாதுகாத்தலும்.

10) கீழே தரப்பட்டவற்றுள் நுகர்வோர் உரிமைகளை மட்டும் உள்ளடக்கிய தொகுதி

A - அறிவைப் பெற்றுக் கொள்ளக்கூடிய தன்மை

B - இழப்பீட்டைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமை

C.- சூழல் தொடர்பாகக் கவனம் செலுத்துதல்.

D - அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்து கொள்வதற்கான உரிமை

E - சமூகம் தொடர்பாகக் கவனம் செலுத்துதல்

F – தெரிவு செய்வதற்கான உரிமை

(1) A,B,C (2) A,C,E (3) B,D,F (4) C,D,E (5) B,C,E

(02 x 10 = 20 புள்ளிகள்)

**தரப்பட்டுள்ள இடைவெளிகளில் பொருத்தமான சொற்களைக் கொண்டு நிரப்புக**

(1)

(அ) அருமையாகக் காணப்படும் வளங்களைப் பயன்படுத்தி பொருள்கள்,சேவைகளை ………………………………….. ……………………………… ஆகிய நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் காரணமாக வணிகம் பிரதானமான பொருளாதாரக் கருமமொன்றாகக் கருதப்படும்.

(ஆ) …………………………………… மற்றும் …………………………………….. தொழினுடப் விருத்தியுடன் அறிமுகப்படுத்தப்பட்ட கணினி மயப்படுத்தப்பட்ட வலையமைப்பின் மூலம் கொடுக்கல் வாங்கல் இடம்பெறும் முறையொன்றாகும்.

(2)

(அ) …………………….. ……………………………… …………………………… பயிற்சியளித்தல், நலன்புரிகள் என்பவற்றுடன் தொடர்புடைய கருமங்கள் மனித வளக்கருமங்களாகும்.

(ஆ) அமைப்பொன்றில் காணப்படுகின்றதும் தாக்கத்தையேற்படுத்துவதுமான ……………………………… ……………………………… என்பன வணிகமொன்றின் அகச்சூழல் என அழைக்கப்படும்.

(3) (அ) நிறுவனத்தின் நோக்கத்தினை இலகுவாக அடைந்து கொள்ளக் கூடியவாறு அமைப்பின் ………………………… ………………………… …………………………… என்பன பிரிந்து செல்லும் முறை நிறுவனக்கட்டமைப்பு எனப்படும்.

(ஆ) வணிகம் சந்தையில் முன்வைக்கின்ற பொருள் அல்லது சேவைக்கு மாற்றுப் பொருள் அல்லது சேவையினை முன்வைக்கின்றவர்கள் ……………………………………உற்பத்தி செய்வோராவர்.

(4) (அ) சமூகத்தில் நேரான தாக்கமொன்றை உருவாக்குவதற்கு வணிகச் செயற்பாடுகளை

எவ்வாறு முகாமைத்துவம் செய்வது என்பது தொடர்பான கருத்தொன்றே சமூகப் பொறுப்பாகும்''என்பது ............................................................ இன் கூற்றாகும்.

(ஆ) நிலைபேறான பொருளாதார அபிவிருத்தியின் போது ................................... குறைத்து ........................................ மேம்படுத்துவதன் மூலம் மனித நலனை மேம்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

(5) (அ) அக ரீதியான விலைநிலைப்புத்தன்மையினூடாகப் ................................., ...................................... போன்ற செயற்பாடுகள் இடம்பெறும்.

(ஆ) பிணைப்பத்திரங்களை மத்திய வங்கி கொள்வனவு செய்யும்போது ................................... விரிவடைவதுடன் விற்பனையின்போது சுருங்கும்.

(02 x 05 = 10 புள்ளிகள்)

**சுருக்கமான விடைகள் தருக.**

(1) வணிகங்களின் பண்புகள் 04 தருக.

...................................... ........................................
...................................... ..........................................

(2) பொருளாதார வாழ்தன்மைக்கான வணிகங்களின் பங்களிப்புக்கள் எவை?

.......................................... ..............................................
.......................................... ...............................................

(3) சமூகப் பொறுப்புக்கள் நிறைவேற்றப்படுவதன் மூலம் வணிகம் பெறும் நலன்கள் யாவை?

................................................ .........................................
.............................................. ..............................................

(4) நிதிக் கொள்கையினை நடைமுறைப்படுத்துவதற்குப் பயன்படும் கருவிகள் 04 தருக.

.............................................. ................................................
.................................................. ..................................................

(5) இலங்கையில் நுகர்வோர் பாதுகாப்பிற்காகத் தொழிற்படுகின்ற அரச நிறுவனங்கள் 04 தருக.

.................................................... ..........................................
...................................................... ...........................................

(02 x 05 = 10 புள்ளிகள்)

## பகுதி – II

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

**(01)** (i) (அ) வணிகங்களின் நோக்கங்கள் 04 தருக.

(ஆ) இலத்திரனியல் வர்த்தகம் நிகழ்காலத்தில் பிரபல்யமடைவதில் தாக்கத்தை ஏற்படுத்திய காரணங்கள் 04 தருக.

(ii) நியதிகளின் அடிப்படையில் வணிகங்களை வகைப்படுத்துக.

(iii) வெதுப்பகமொன்றின் வணிகச் செயற்பாடுகளை வரைபடம் மூலம் காட்டுக.

(iv) (அ) பின்வரும் தரப்பினர் வணிகத்திற்கு முக்கியத்துவம் பெறுவதற்கான காரணங்கள் தலா 02 தருக. (கடன் கொடுநர்கள், வாடிக்கையாளர்கள்)

(ஆ) வணிகச் சூழலைக் கற்பதினூடாக வணிகரொருவர் பெறும் நன்மைகள் யாவை?

(v) (அ) பேரினச் சூழல் காரணிகள் வணிகத்தில் ஏற்படுத்துகின்ற தாக்கங்களுக்கு 02 உதாரணங்கள் தருக.

(ஆ) ஒவ்வொரு பேரினச்சூழல் காரணிகளுக்கிடையிலும் காணப்படும் இடைத்தொடர்புகள் 02 தருக.

(20 புள்ளிகள்)

**(02)** (i) (அ) வணிகத்தினால் சமூகரீதியான பொறுப்புக்கள் நிறைவேற்ற வேண்டிய பிரிவினர்களைக் குறிப்பிட்டு தலா 02 பொறுப்புக்களையும் குறிப்பிடுக.

(ஆ) நிலைபேறான அபிவிருத்திக் கோபுரங்களைக் குறிப்பிட்டு அவற்றின் நிலைபேற்றிற்காக வணிகங்கள் பங்களிப்புச் செய்யும் முறைகள் தலா 02 தருக.

(ii) பின்வருவன எத்தகைய நிலைபேறான தன்மையை கொண்டுள்ளது என்பதனை உறுதிப்படுத்துவதற்கு மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகள் என்பதனைக் குறிப்பிடுக.

- ஆபத்து விளைவிக்கும் பொருள்களைப் பாதுகாப்பாகப் பயன்படுத்துதல்.
- புத்துருவாக்கங்களை அறிமுகப்படுத்தல்
- சட்டத்தையும் சமாதானத்தையும் பாதுகாப்பதற்குப் பங்களிப்புச் செய்தல்.
- மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்குப் பங்களிப்புச் செய்தல்.
- உற்பத்தி நடவடிக்கைகளின்போது மூலப்பொருள்கள், வலு, நீர் போன்ற வளங் களைப் பாதுகாத்துக் கருமமாற்றுதல்.
- உற்பத்திச் செயல்முறைகளை ஊக்குவித்தல்.

(iii) கழிவுப்பொருள் முகாமைத்துவத்தின்போது 4R எண்ணக்கருப் பிரயோகத்தினூடாக நிலைபேறான அபிவிருத்தியை அடையும் முறையை உதாரணத்தின் மூலம் குறிப்பிடுக.

(iv) (அ) வணிகங்கள் வணிக ஒழுக்க விழுமியங்களைப் பின்பற்ற வேண்டியதன் முக்கியத்துவங்கள் 02 தருக.

(ஆ) வணிக ஒழுக்க விழுமிய முறைமையொன்றைக் கட்டியெழுப்பும்போது கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் யாவை?

(20 புள்ளிகள்)

**(03)**

(i) (அ) அரசு வணிகங்களில் செல்வாக்குச் செலுத்துகின்ற முறைக்கான உதாரணங்களைக் குறிப்பிடுக.

- போட்டியாளரொருவராகச் செயற்படல்
- கொள்கைகளை உருவாக்கல்
- வரி அறவீட்டாளரொருவராகச் செயற்படல்

(ஆ) இலங்கைத் தரக்கட்டளைகள் பணியகம் வணிகங்களுக்கு முக்கியத்துவம் பெறுவதற்கான காரணங்கள் 03 தருக.

(ii) அரசின் இறைக்கொள்கையை வரைபடம் மூலம் காட்டுக.

(iii) (அ) அரசின் செலவுகளை உதாரணத்துடன் வகைப்படுத்துக.

(ஆ) அரசின் இறைக் கொள்கையானது வணிகங்களில் தாக்கத்தை ஏற்படுத்தும் முறைகளுக்கு 02 உதாரணங்கள் தருக.

(iv) (அ) கடன் கட்டுப்பாட்டு முறைகளை சுருக்கமாக விளக்குக.

(ஆ) அண்மைக் காலத்தில் நுகர்வோர் பாதுகாப்பானது கடந்த காலங்களை விடத்
தேவையானதொன்றாக இருப்பதற்கான காரணங்கள் 02 தருக.

(v) (அ) நுகர்வோர் பாதுகாப்பின் மூலம் நுகர்வோருக்கும் வணிகர்களுக்கும் ஏற்படும் அனுகூலங்கள் தலா 02 தருக.

(ஆ) ஐக்கிய அமெரிக்கக் குடியரசின் முன்னாள் ஜனாதிபதி ஜோன் எப்.கெனடியினால் பிரகடனப்படுத்தப்பட்ட நுகர்வோர் உரிமைகளை மேலதிக சர்வதேச நுகர்வோர் உரிமைகளிலிருந்து வேறுபடுத்துக.

(20 புள்ளிகள்)